# 7 சான்றோர் மொழி




## பாடல் பொருள்

கற்றவர்களின்முன் தான் கற்ற கல்வியைக் கூறுதல் இனிமையானது. அறிவில் மேம்பட்டவர்களுடன் சேர்ந்திருப்பது மிகவும் இனிமையானது. எள் அளவு சிறியதாயினும் தான் பிறரிடம் கேட்டுப் பெறாமல், பிறருக்குக் கொடுத்தல் எல்லாவற்றையும்விட இனிமையானதாகும்.

## பொருள் அறிவோம்

| | |
|---|---|
| மிக்கார் | : அறிவில் மேம்பட்டவர் |
| எள்துணை | : எள் அளவு |
| எத்துணையும் | : எல்லாவற்றிலும் |
| மாண்பு | : பெருமை |

## நூலைப்பற்றி...

இந்நூல் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனாரால் எழுதப்பட்டது. வாழ்க்கைக்கு நன்மை தரும் இனிய கருத்துகளைக் கூறுவது. நாற்பது பாடல்களைக் கொண்டது. எனவே இனியவை நாற்பது என்று அழைக்கப்படுகிறது.

செய்யுளைத் தெளிவான உச்சரிப்புடன் படித்தல், அதன் சரியான பொருளைப் புரிந்து கொண்டு கருத்தை வெளிப்படுத்துதல்.

## வாங்க பேசலாம்

- பாடலைச் சரியான உச்சரிப்புடன் படித்துக்காட்டுக.
- கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் உள்ள வேறுபாடுகள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.
- உன் நண்பனின் தேவை அறிந்து அவன் கேட்காமலேயே உதவிய அனுபவம் உனக்கு உண்டா? அதில் உனக்கு மகிழ்ச்சியா? வருத்தமா? ஏன்? கலந்துரையாடு...

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. உரைத்தல் என்ற சொல் குறிக்கும் பொருள் ..........................

(அ) பாடுதல் (ஆ) வரைதல்

(இ) சொல்லுதல் (ஈ) எழுதுதல்

2. ஈதல் என்ற சொல் குறிக்கும் பொருள் ..........................

(அ) கொடுத்தல் (ஆ) எடுத்தல்

(இ) தடுத்தல் (ஈ) வாங்குதல்

3. மிக்காரை என்ற சொல்லின் எதிர்ச்சொல் ..........................

(அ) அறிவிலாதார் (ஆ) அறிந்தோரை

(இ) கற்றோரை (ஈ) அறிவில்மேம்பட்டவர்

4. இரவாது என்ற சொல் குறிக்கும் பொருள் ..........................

(அ) பிறரிடம் கேட்டுப் பெறாது (ஆ) பிறரிடம் கேட்டுப் பெறுவது

(இ) பிறரிடம் கொடுப்பது (ஈ) பிறருக்கு கொடுக்காது

5. சேர்தல் என்ற சொல் குறிக்கும் பொருள் ..........................

(அ) தேடுதல் (ஆ) பிரிதல்

(இ) இணைதல் (ஈ) களைதல்

## பொருள்பட எழுதிப் படித்து மகிழ்க

1. என க்குஇனி ப்புபி டிக்கும்

2. உழை ப்புஉ யர்வுத ரும்

3. மர ம் வள ர்ப்போ ம்ம ழைபெ றுவோம்

4. சுத் தம்சு கம்த ரும்

5. இனி யதமி ழில்பே சுங்கள்

## நீ எதை விரும்புவாய்? ஏன்? கலந்துரையாடுக





## உன்னை அறிந்துகொள்

- உன் நண்பனை உனக்குப் பிடிக்கக் காரணங்கள் எவை?
- உன்னிடத்தில் உனக்குப் பிடிக்காதது எது?
- வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.



### சிந்திக்கலாமா?

காதரும் அப்துலும் சகோதரர்கள், இருவரும் தங்களுக்குக் கிடைக்கும் சிறு தொகையைச் சேமித்து வருகின்றனர். அந்த ஆண்டு ஏற்பட்ட புயல் பாதிப்பினை அறிந்த காதர் புயல் நிவாரண நிதிக்காக, தான் உண்டியலில் சேமித்து வைத்திருந்த பணத்தைக் கொடுக்க நினைக்கிறான். அவனின் தம்பி அப்துல், தனது சேமிப்பில் இருந்து கிடைத்த தொகையினைக் கொண்டு பிடித்தமான பொருளை வாங்கிக் கொள்ள நினைக்கிறான். இவர்கள் இருவரில் நீ யாராக இருக்க விரும்புகிறாய்? அதற்குரிய காரணங்களைக் கூறு.



### செயல் திட்டம்

'கல்வி' என்ற அதிகாரத்தில் இருந்து எவையேனும் ஐந்து திருக்குறள்களைப் படித்து, எழுதி வருக.